**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.145/19**

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.தேவதாஸ், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர், என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.தேவதாஸ். |
| வயது | - 43 |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.முனுசாமி |
| கிராமம் | - கீழ்மட்டை |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

18.03.2024
**வா.சா.1.**
**2 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் மேற்படி இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.276/2015ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். என்னுடைய வழக்கில் நான் சொத்து விவரத்தில் கீழ்மட்டை கிராமம் சர்வே எண்.107/30-ல் 100 சதுர மீட்டர் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு தாவாவில் நான் ஜக்குபந்தி எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சுவாதீனம் ஒப்படைக்க கோரி பரிகாரம் கேட்டுள்ளதால் என்னுடைய சொத்து விவரத்தில் ஜக்குபந்தியை குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், குறிப்பிடாத காரணத்தால் அதன் அடிப்படையிலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2) நான் தாக்கல் செய்துள்ள தாவாவுடன் சொத்தின் அமைப்பு பொறுத்து மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்தின் அமைப்பு குறித்து கண்டறிய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளோமா என்றால் இல்லை. 07.06.1967-ல் தாவா சொத்தை சடேசன் என்கிற வெள்ளை கண்ணு கிரையம் பெற்றுள்ளார் என்பதன் அடிப்படையில்தான் தாவாவை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதி படிக்க தெரியும். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் 107-ல் கிழக்கு மேற்கு கெஜம் 20, வடக்கு தெற்கு 30 கெஜம் அளவுள்ள காலிமனையில் பொதுவில் 3-ல் 1 பாகம் என குறிப்பிட்டுதான் கிரையம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மீதியுள்ள 3-ல் 2 பாகம் யாருக்கு உரியது என்றால் அது எங்கள் மூதாதையர் சொத்துதான்.

3) நடேசன் என்கிற வெள்ளைகண்ணு வா.சா.ஆ.3 ஆவணப்படி 3ல் 1 பாகம் பிரித்துக்கொண்டாரா என்றால் மொத்த சொத்து எங்கள் மூதாதையர் சொத்து என்பதால் பாகம் எதுவும் பிரித்துக்கொள்ளவில்லை. சர்வே எண்.107ல் மொத்த விஸ்தீரனம் சுமார் 25 செண்ட் இருக்கும். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரனம் குறித்து நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.107 என்பது தற்போது சர்வே எண்.107/28, 107/29, 107/30, 107/32, 107/33, 107/34, 107/35 என உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் உட்பிரிவு செய்யப்படவில்லை அவர்களாகவே பிரித்துக்கொண்டார்கள். தற்போது 107/28 என்பது சர்வே எண்.107/48 என்றும், சர்வே எண்.107/32 என்பது 107/45 என்றும், சர்வே எண்.107/33 என்பது சர்வே எண்.107/46 என்றும், சர்வே எண்.107/34 என்பது சாவே எண்.107/47 என்றும் உட்பிரிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறித்து இதுவரை என்ன மாற்றம் செய்துள்ளார்கள் என்று தெரியவில்லை.

4) நடேசன் என்ற வெள்ளைகண்ணு என்பவரின் உடன் பிறந்த சகோதரா் மாசிலாமணி என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது. சித்தப்பா மகன் அல்லது பெரியப்பா மகன் என்று சொல்வார்கள். நான் சொல்வதுபோல் மாசிலாமணி நடேசனின் சித்தப்பா மகனோ அல்லது பெரியப்பா மகனோ கிடையாது என்றும் அவரின் உடன் பிறந்த சகோதரா் என்று சொன்னால் சரியல்ல. நடேசன் என்கிற வெள்ளைகண்ணு மற்றும் மாசிலாமணி ஆகியோர்கள் ஏக குடும்பமாக இருந்தார்கள் என்றும் அந்த சமயம் நடேசன் பெயரில் சொத்துக்கள் கிரையம் பெற்றப்பட்டது என்று சொன்னால் அதுபோல் எனக்கு தெரிந்து எதுவும் இல்லை. மேற்படி ஏக குடும்பமாக சொத்துக்களை அனுபவித்து வந்து நடேசன் என்கிற வெள்ளைகண்ணு மற்றும் மாசிலாமணி ஆகியோர்களுக்கு பாக பிரிவினை செய்துகொண்டு சர்வே எண்.107/30, சர்வே எண்.107/32, சர்வே எண்.107/33 நடேசன் என்கிற வெள்ளைகண்ணு பாகத்திற்கு வந்தது என்று சொன்னால் பாகம் எதுவும் பிரித்துக்கொள்ளவில்லை.

5) அதேபோல் மாசிலாமணிக்கு சர்வே எண்.107/29, சர்வே எண்.107/31, சர்வே எண்.107/34 ஆகியவை அவருக்கு பாகமாக வந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மனைகளுக்கு செல்வதற்காக அவற்றின் கீழண்டை பக்கம் சர்வே எண்.107/28ல் 5அடி விட்டு அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நடேசன் என்கிற வெள்ளைகண்ணு அவரது சொத்துக்களை அனுபவித்து வந்து எனது தகப்பனார் முனுசாமி மற்றும் அவரது சகோதரா் வேதபுரி ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி முனுசாமி மற்றும் வேதபுரி ஆகியோர்கள் பாக பிரிவினை செய்துகொண்டதில் நடேசனுக்கு பாகமாக வந்த சர்வே எண்.107/30, 107/32, 107/33 ஆகிய மூன்று மனைகளும் வேதபுரியின் பாகத்திற்கும் என்னுடைய தகப்பனார் முனுசாமிக்கும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தொகுப்பு வீடு உள்ள இடம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த இடம் என் தகப்பனார் கிரையம் பெற்றது.

6) மேற்படி என் தகப்பனார் மேற்படி இடத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த இடத்தில் என் தகப்பனார் அனுபவித்து வந்ததால் அவர் பெயரிலேயே பட்டா கொடுத்தார்கள். என் தகப்பனார் பெயரில் தனிப்பட்ட முறையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனாரும் இறந்துவிட்டார். அவர் உடன்பிறந்த சகோதரர் வேதபுரியும் இறந்துவிட்டார். சர்வே எண்.107/30-க்கு நடேசன் என்கிற வெள்ளைகண்ணு பெயரிலும் சர்வே எண்.107/32 வேதபுரியின் மனைவி நீலா பெயரிலும் சர்வே எண்.107/33 வேதபுரியின் மருமகள் கண்ணகி பெயரிலும் பட்டா தற்போது உள்ளது என்று சொன்னால் அவர்கள் போர்ஜரியாக உருவாக்கிக்கொண்டார்கள்.

7) சர்வே எண்.107/30-ல் 3 அடி சுவர் எழுப்பப்பட்டு வீடு கட்டப்படாமல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வீடுகட்டிவிட்டார்கள். வேதபுரியின் மனைவி நீலாதான் மேற்படி சர்வே எண்.107/30ல் 3 அடி சுவர் எழுப்பியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நடேசன் என்கிற வெள்ளைகண்ணுக்கு பாகமாக வந்த சொத்தில் மாசிலாமணிக்கோ அவரது வாரிசுகளுக்கோ எந்தவித உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.107/30ல் வேதபுரியின் மனைவி நீலா பெயரில் உள்ளது என்றும், எனவே நாங்கள் வழக்கு தாக்கல் செய்வதாக இருந்தால் நீலா பெயரில்தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், பிரதிவாதிகள் பேரில் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தவறானது என்று சொன்னால் சரியல்ல. மாசிலாமணிக்கு பாகமாக வந்த சர்வே எண்.107/29, 107/31, 107/34 ஆகியவை அவரது காலத்திற்கு பிறகு அவரது மகன்களான நாகப்பன், கண்ணன், பூங்காவனம் ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு வேறு சொத்துதான். மேற்படி மூவரும் பாக பிரிவினை செய்துகொண்டதில் சர்வே எண்.107/29, 107/31, 107/34 ஆகியவை நாகப்பனுக்கு பாகமாக வந்தது என்றும், கண்ணன் மற்றும் பூங்காவனம் ஆகியோர்களுக்கு வேறு சொத்தில் பாகம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

8) மேற்படி சர்வே எண்.107/29 பூங்காவனம் பெயரிலும் சர்வே எண். 107/31 அவரது மனைவி லட்சுமி பெயரிலும், சர்வே எண்.107/34 அவரது மருமகள் கவிதா பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்கள் அனைத்தும் கீழ்மட்டை கிராமம் பாடசாலை தெருவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தெருவை ஒட்டினாற்போல் தெருவிற்கு தெற்கு சர்வே எண்.107/29 அதற்கும் தெற்கே சர்வே எண்.107/30-ம் அதற்கும் தெற்கே சர்வே எண்.107/31, அதற்கும் தெற்கு சர்வே எண்.107/32, சர்வே எண்.107/33, சர்வே எண்.107/34 வடக்கு தெற்காக அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது போர்ஜரியாக உருவாக்கி உள்ளார்கள். சர்வே எண்.107/29ல் 9ம் பிரதிவாதி முருகன் பாதி இடத்தை வீடு கட்டியும், மீதியிடத்தை கடைக்கால்போட்டும் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அவர் மெத்தை வீடு கட்டி ஏறக்குறைய 15 ஆண்டுகள் இருக்கும் என்று சொன்னால் இல்லை இந்த வழக்கு தாக்கல் செய்தபோதுதான் வீடு கட்டியிருப்பார். சர்வே எ.107/31ல் பூங்காவனத்தின் மனைவி லட்சுமியம்மாள் மெத்தை வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

9) சர்வே எண்.107/34ல் கவிதா காலி மனையாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள்தான் மரம் வைத்துள்ளோம். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது பிரதிவாதிகள் மெத்தைவீடு கட்டிக்கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மனை எண் பட்டா 25 வருடங்களுக்கு முன்பே பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்றும் நான் இந்த வழக்கிற்காக தற்போது பிரதிவாதிகள் போர்ஜரியாக மாற்றிக்கொண்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.107/32 மற்றும் சர்வே எண்.107/33 ஆகியவை வேதபுரியின் மனைவி மற்றும் மருமகளும் இருவரும் 2 மனைகளையும் சேர்த்து கூரை வீடு கட்டிக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

10) அதனால் சர்வே எண்.107/30க்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்றும் அந்த சொத்துக்கள் வேதபுரியின் வாரிசுகள் அனுபவத்தில்தான் உள்ளது என்றும் நான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் அவர்கள் பெயரில்தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் மேற்படி சர்வே எண்ணிற்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. சாவே எண்.107/30 பிரதிவாதிகளின் சுவாதீன அனுபவத்தில் இல்லையென்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.107/30 மற்றும் இதர சொத்துக்களுக்கும் அசல் வழக்கு எண்.199/2018 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.107/30யை அ-அட்டவணை சொத்தாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்தள்ளேன். அந்த வழக்கில் பிரதிவாதிகள் சர்வே எண்.107/30 வேதபுரி என்பவருக்கு பாகமாக வந்த சொத்து என்று எதிர்வியாஜியம் செய்தார்களா என்றால் அதுகுறித்து எனக்கு புரியவில்லை. அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் தள்ளுபடியாக வில்லை. சர்வே எண்.107/30 எங்களுக்கு என்று தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். நான் சொல்வதுபோல் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்றும் நான் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லையென்றும் தாவா சொத்தை ஆக்கிரமித்து பிரதிவாதிகள் கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றும், அவர்களுக்கு பாகமாக வந்த சொத்தில்தான் கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அது எங்களுக்கு பூர்வீகமான சொத்து. நாங்கள் தாக்கல் செய்துள்ள சொத்து விவரம் சரியானது அல்ல என்று பாடசாலை தெருவிற்கு தெற்கே சர்வே எண்.107/29 தான் உள்ளது என்றும் சர்வே எண்.107/30 இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து விவரம் சரியாக குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள எங்களது தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.